மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கிற 22 அரசு பராமரிப்பு இல்லங்களிலும் பெரும்பாலான இல்லங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சில அரசால் வழங்கப்பட்டவை ; சில தனியார் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டவை ; சில நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டவை. எனவே எந்த இல்லத்துக்கும் தொலைக் காட்சிப் பெட்டி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களோ அங்கே ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அவரே வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*5342. திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளச்சல் சட்டமன்றத் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கக்கோட்டுதலை ஊராட்சி, கட்டி மாங்கோடு ஊராட்சி, குருந்தன்கோடு ஊராட்சி, தலக்குளம் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கக்கோட்டுதலை, கட்டிமாங்கோடு, குருந்தன்கோடு, தலக்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகள் மிக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காத பகுதி. ஆகவே, அந்த ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகின்ற பொழுது அந்தக் கிராமங்களிலே நீர் ஆதாரம் இல்லாத சூழ்நிலையிலேதான் பக்கத்திலே இருக்கிற நீர் ஆதாரம் இருக்கிற இடத்திலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டிய நான்கு ஊராட்சிகளிலும் 27 குடியிருப்புகள்

1990 ஏப்ரல் 19]

உள்ளன. அந்த 27 குடியிருப்புகளிலும், ஞாரோடு என்ற குடியிருப்பில் ஒரு ஆழ் குழாய்க் கிணறு பொதிக்கப்பட்டுள்ளது, கக்கோட்டுதலை என்ற இடத்தில் இரண்டு பொது நல்லிகளும் இரண்டு ஆழ்க் குழாய்க் கிணறுகளும் இருக்கின்றன. புள்ளிச்சன்விளை என்ற இடத்தில் மூன்று பொது நல்லிகளும் ஒரு ஆழ் குழாய்க் கிணறும் உள்ளது. செக்காரவிளை என்ற இடத்தில் முப்பதாயிரம் லிட்டர் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்று உள்ளது. காட்டச்சி என்ற இடத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு உள்ளது. ஆகவே, இது போன்ற எல்லாயிடங்களிலுமே கொடுக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலேயெல்லாம் ஆழ்க் குழாய்க் கிணறுகளும், குடிநீர்த் தேக்கத் தொட்டிகளும் இருக்கின்றன. மேலும் உறுப்பினரவர்கள் இந்த இடங்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்று கருதுவார்களேயானால் அது குறித்து ஆய்வு செய்து அந்த இடங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலையா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதைப் போல அங்கே குடிநீர்த் தொட்டிகள் இருக்கின்றன. ஆனால், குடிநீர்த் தொட்டிகளுக்கு ஆதாரமான கிணறுகளிலே தண்ணீர் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன். ஆழ் குழாய்க் கிணறுகள் ஏராளமாக போடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆழ் குழாய்க் கிணறுகளிலே நல்ல தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவ்வளவு உப்புத் தண்ணீராக இருக்கின்ற காரணத்தினாலே அந்த மக்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் இல்லாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. தலக்குளம் ஊராட்சிக்குப் பக்கத்திலே உள்ள பெரிய குளத்தில் ஏராளமாக தண்ணீர் இருக்கிறது. அந்தக் குளம் 150 ஏக்கரா பரப்பளவு உள்ளது. எந்தக் காலத்திலும் வற்றாத குளம். அந்தக் குளத்திலே ஒரு கிணறைத்தோண்டி—பெரிய கிணறைத்தோண்டி, இந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தித் தர முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தினைக் குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.